தி.மு.க. தீர்மானக்குழு சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

கவிஞர் தமிழ்தாசன் தலைமையில் அக்ரி கணேசன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஜூன். 1- கழகத் தீர்மானக்குழு நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் நேற்று, 31.05.2026 -ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணி அளவில் அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் கூட்ட அரங்கில், தீர்மானக்குழுத் தலைவர் கவிஞர் தமிழ்தாசன் தலைமையில் தீர்மானக்குழு செயலாளர் அக்ரி கே.பி.டி.கணேசன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தீர்மானக்குழு துணைத் தலைவர் டாக்டர் மாசிலாமணி, தீர்மானக்குழு இணைச் செயலாளர் பா.சத்திய மூர்த்தி , தீர்மானக்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, தீர்மானக் குழு உறுப்பினர்கள் க. வேங்கடபதி, ச.தங்கவேலு, ஆர்.சேதுநாதன், செஞ்சி சிவா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன.

தமிழக வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி

2026 ஆம் ஆண்டு நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு. கழகம் வைத்த வேண்டுகோளுக்கு இணங்க, கழகத்தின் மீதும், தலைவர் தளபதி அவர்கள் மீதும் நம்பிக்கை வைத்து, கழகத் தலைவர் தளபதி மற்றும் தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக்கூட்டணிக்கு, வாக்களித்த தமிழக மக்கள் ஒரு கோடியே 54 இலட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்காளர்களுக்கு இந்தத் தீர்மானக் குழுவானது தனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

கழகத் தலைவர் தளபதியார்க்கு நன்றி

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் 2026 இல் தந்தை பெரியார் அவர்களின் சமூக நீதி சார்ந்த இலட்சியக் கோட்பாடு உறுதியோடும்; பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் நின்றும் ; தமிழ்நாட்டில் மதசார்பற்றக் கொள்கைக் கூட்டணியை உருவாக்கி; அதன் மூலம் தேர்தல் களத்தில் பரப்புரை உறுதியோடு நம்மையெல்லாம் நெறிப்படுத்தி வழி நடத்தியவராய்; ஓய்வு இல்லாமல் உழைத்து 73 சட்டமன்றத் தொகுதிகளில் நமது கழகக்கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெறக் காரணமாகப் பெரிதும் விளங்கியவராய்த் திகழ்ந்த நம் கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு, இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது .

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருக்கு வாழ்த்துகள்

தமிழ் நாடு முழுவதும் சட்டமன்றத் தேர்தலில் ஈடுபட்டுக் கழகக் கூட்டணி வெற்றி பெற, வாக்காளர்கள் மத்தியில் கடுமையான முறையில் பரப்புரை செய்து வந்தவரும்; இரண்டாவது முறையாகச் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் நின்று வெற்றி பெற்று எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுச் சட்டமன்றப் பணிக் கடமை ஆற்றி வருபவருமான கழக இளைஞரணிச் செயலாளர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக் கூட்டம் நன்றி மிகுந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது .

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் சிறப்பாகக் கொண்டாடுதல்

பேரறிஞர் அண்ணாவின் மறைவிற்குப் பிறகு, பாலைவனத்திலும் , சோலைவனத்திலும் பயணம் செய்து கழகத்தை வழி நடத்தியவரும்; இந்திய ஜனநாயகப் போரில் அரசியல் அரணாக நின்றவரும்; இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு ஊனம் ஏதும் ஏற்படாமல் பாதுகாவலராக இருந்தவரும்; மதசார்பற்ற இந்தியாவைக் காப்பதில் தலையாயத் தளகர்த்தராக முன் நின்றவரும்; தமிழ், தமிழினம், தமிழ்நாடு என்பதில் தன்னை ஒப்படைத்துக் கொண்டவரும்; தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் கொள்கைகளை ஆட்சியிலும், கட்சியிலும் நடைமுறைப்படுத்திச் சமூக நீதியை மக்கள் பெறுவதற்குக் களங்கண்ட வரும்; பல்வேறு சோதனைகளைத் தாண்டித் திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் பேரியக்கத்தைத் தலைமை தாங்கி நடத்திய வருமான முத்தமிழ் அறிஞர்கலைஞர் அவர்களின் பிறந்தநாள். வரும் ஜூன்3; அந்நாளில் ஆங்காங்குக் கழக அமைப்புகள் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்வதில் பங்கேற்று மக்களுக்குப் பயன்படும் வகையில், சிறப்பாகக் கொண்டாடிட இத் தீர்மானக் குழு தீர்மானிக்கிறது .

தலைவர் எடுக்கும் முயற்சிகளுக்குத் துணை நிற்போம்

நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில் கழகம் வெற்றி வாய்ப்பை இழந்த

காரணத்தைக் கண்டறிய; இரத்தமும், சதையும், நாடி நரம்பும், எலும்புமாக இருந்து வரும் கழக உடன் பிறப்புகள், பொறுப்பிலுள்ள நிருவாகிகள் மற்றும் பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களைக் கேட்டறிய இணையதளம் ஒன்றைத் துவக்கியதோடு; அந்தந்தப்பகுதி, தொகுதிகளில் சென்று தலைமையால் நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழு நேரடியாக அனைவரையும் சந்தித்துக் கருத்துகளைக் கேட்டறிந்து தலைமைக்கு அறிக்கைகள் தரவும்; பெற்ற அறிக்கைகள் மீது கழகத்தைச் செம்மைப்படுத்தி மறுசீரமைப்பு செய்வதற்குக் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் எடுத்துக் கொள்ளப்படவுள்ள கழகப் புத்தாக்க எவ்வகை முயற்சிகளுக்கு, என்றென்றும் இத் தலைமைத் தீர்மானக் குழு துணை நிற்கும் என்று உறுதி அளிக்கிறது .

துரோகம் செய்த காங்கிரஸ் கட்சிக்குக் கண்டனம்

தமிழகத்தில் கழகக் கூட்டணியில் பங்கேற்று இருந்த காங்கிரஸ் கட்சி, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெருமளவுக்கு அவ்வப் போது பெற்று வந்ததோடு, கழகத்தின் ஆதரவோடு ஒன்றியத்தில் ஆட்சி அமைந்த போதும், தேசிய அளவில் இந்திய மக்களுக்காக எடுக்கும் எவ்வித மான முடிவிலும் கழகத்தின் பங்களிப்புத் துணை என்பது, வலிமை வாய்ந்தாக அமைந்து இருந்தது. கழகம் இந்தியா கூட்டணியில் அங்கம் பெற்றிருந்த முறையிலும் காங்கிரஸ் கட்சிக்குத் தனக்கென சுய மரியாதைச் செல்வாக்கு பெற்றிருந்தது. தேர்தலுக்கு முன்பு கூட ஒரு மாநிலங்கள் உறுப்பினர் இடத்தையும் திமுகவிடமிருந்து பெற்றது . கழகச் செயல்வீரர்கள் உழைப்பினால் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் ஐந்து உறுப்பினர்களையும் காங்கிரஸ் பெற்றது. தேர்தல் முடிந்து நன்றி கூட திமு.க. தலைமைக்குச் சொல்ல முன்வராத காங்கிரஸ், பதவிப் பித்து பிடித்தலைந்து ஓடோடிச் சென்று, கொல்லைப் புறத்தில் புதிய கூட்டணி அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்ட அக்கட்சியின் அநாகரிக செயலானது; அரசியல் வரலாற்றில் சிறிதும் நன்றியில்லாமல் துரோகம் இழைத்ததாகும். பதவிக்காக முதுகில் குத்தி, புருடஸ் வரலாறு படைத்த கயமைத்தனக் காங்கிரஸ் கட்சிக்கு இந்தத் தீர்மானக் குழுக் கூட்டம் தனது வன்மையான கண்டனத்தைப் பதிவு செய்கிறது.

சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கத் தவறியுள்ள மோசடி ஆட்சிக்குக் கண்டனம்

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கழக அரசுக்கு எதிராகப் பல்வேறு வகையில் கோயபல்ஸ் பிரச்சாரம் செய்தும்; பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்தும்; பட்டி, தொட்டிகள் எங்கும் பண மூட்டைகளை இறக்கி விட்டும் ; சிறுவர்கள் மட்டுமின்றி இளைஞர்கள், பெண்கள் போன்ற வாக்காளர்களைச் சமூக வலைதளங்கள், தொழில் நுட்ப தளங்கள் என மூளைச் சலவைப் பரப்புரை செய்தும் வந்த தற்குறிகளால் தமிழகக் கோட்டையைப் பிடித்தார்கள். அறநெறி அரசியல் தவறிக் குதிரைப் பேர அரசியல் நடத்திய தன் மூலம் சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் முயற்சி நடைபெற்றது . ஆட்சிக்கு வந்து 20 நாள்கள் கூட ஆகவில்லை என்ற போதும்; இந்த ஆளவந்தார்கள் ஆட்சியில் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகச் சிறுமிகள், மாணவிகள் குடும்பப் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், ரவுடிகள் நடத்தும் 60க்கும் மேற்பட்ட படுகொலைகள், கொள்ளை, வழிப்பறி, திருட்டு, கஞ்சா பிரவுன் சுகர் போன்ற போதைப்பொருள் விற்பனைகள் எனச் சமூகச் சீர்கேட்டு அவலங்கள் எங்கும் தொடர்கின்றன. அரசியல் மோசடித் தனம் செய்து தமிழகத்தில் அரியணை எறிய இவர்கள் ஆட்சியில் ஏற்பட்டுள்ள சட்டம் ஒழுங்குச் சீர்கேடுகள், சட்டமன்ற அவை தலைவர், முதலமைச்சர், அமைச்சர்கள் பதவியேற்பு நிகழ்ச்சிகளில் தமிழர்உரிமை மறுக்கப்பட்டு, “தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல்” மூன்றாம் இடத்தில் தள்ளப்பட்டது; அரசுக்கு ஆலோசனை சொல்ல சோதிடர் ஒருவரை நியமித்தது; கர்நாடக அரசு மேகதாது அணைகட்டும்முயற்சியைக் கண்டிக்கத் துணிச்சல்லாதது ; தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய நிதி ஆதாரங்களைப் பிரதமர் மோடியிடத்தில் கேட்டுப் பெறத் தெம்பு இல்லாதது; “நீட்” தேர்வு விலக்குப் பற்றிக் குரல் கொடுக்காதது ; அரசு நிர்வாகம் பற்றி இதுவரை செய்தியாளர்களைச் சந்திக்காதது; வெற்று விளம்பரங்கள் செய்து வருவது என இப்படியான ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு, நிர்வாக எந்திரம் இயங்காத இந்த ஆட்சியின் மெத்தனப் போக்கிற்குக் கழகத் தீர்மானக் குழு தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்கிறது.

இரங்கல் தீர்மானம்

கீரை எம் .எஸ். விஸ்வநாதன், (தீர்மானக் குழுச் செயலாளர்,) அறந்தாங்கி மிசா சி.இராமநாதன், (தீர்மானக் குழு உறுப்பினர்) பி.ஆர்.சரவணன் (தீர்மானக் குழு உறுப்பினர்) ஆகியோர் மறைவிற்கு தீர்மானக் குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்த வேண்டுகிறேன்.

இவ்வாறு தீமானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றியம் நரசிங்கராயன் பேட்டை ஊராட்சியை சேர்ந்த மாற்றுக் கட்சி நிர்வாகிகள் 100க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்கியார் அலி மஸ்தான் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில்

ஜூன் 3 அன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் - நலத்திட்ட உதவிகள்!

மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்டை, ஜூன் 1 - புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.ரகுபதி தமது அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

“உலகம் முழுவதிலும் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கும், மூத்த மொழியாம் தமிழ்மொழி செம்மொழி தகுதியைப் பெற்று இன்று பட்டொளி வீசி பறப்பதற்கும் காரணமாயிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவை தலைமைக் கழகத்தின் வழிகாட்டுதல்களோடு ஜூன் 3ம் தேதி முதல் எழுச்சியோடு கொண்டாடப்படவிருக்கிறது

உலகத்தலைவர்களில் தாம் போட்டியிட்ட இடங்களிலெல்லாம் வெற்றி பெற்ற ஒரே தலைவராய் , தமிழ்நாட்டை செதுக்கிய சிற்பியாய் திகழும், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவராம் கலைஞர் அவர்கள், தமது 14ம் வயதில், திருவாரூரில் தொடங்கிய பொதுவாழ்வு பயணத்தில், எத்தனையோ சாதனைகளை படைத்து உயர்ந்து இருந்திருக்கிறார்.

அப்படிப்பட்ட அந்த மகத்தான தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கழகத்தலைவர் தளபதி, கழக இளைஞரணி செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது வழிகாட்டுதல்களோடு புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் ஜூன் 3 ந் தேதி பிறந்த குழந்தைகளுக்கு புதுக்கோட்டை தெற்கு மாபட்ட தி.மு.க. மற்றும் தெற்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில் ஜூன் 3ந் தேதி காலை 10 மணிக்கு தங்க மோதிரம் வழங்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து பொன்னமராவதி அரசு மருத்துவமனையில் ஜூன் 3ந் தேதி பிறந்த குழந்தைகளுக்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் பொன்னமராவதி நகர திமுக சார்பில் தங்க மோதிரம் வழங்கப்படுகிறது.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் முழுவதிலும் மாவட்ட, ஒன்றிய ,நகர, பேரூர், கிளை மற்றும் வார்டுகள் தோறும் கழக கொடி ஏற்றியும் , பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் சிறப்போடு கொண்டாடப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து ஜூன் 4ந்தேதி மதியம் 3 மணிக்கு மேல் திருமயம், பொன்னமராவதி, அரிமளம் ஆகிய ஒன்றியங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய ,நகர, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

சேலம் மத்திய மாவட்டத்தில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!

சேலம், ஜூன்.1– சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

தந்தை பெரியாரால் தன்மான உணர்வூட்டப்பட்டு, தமிழ் நிலத்தின் மக்களுக்கென, தமிழினத்தின் வாழ்வுக்கென, தமிழ் மொழியின் உரிமைக்கென பேரறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்ட கழகத்தை அரை நூற்றாண்டு காலம் தன் தோளில் சுமந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். தனது 14வது வயதில் தமிழ் கொடியை ஏந்தி திருவாரூர் மண்ணில் தமிழ்காக்கும் போராட்டத்தில் மாணவராக தொடங்கி, தாய் தமிழ் நாட்டை 19 ஆண்டுகள் ஆட்சி செய்து, தமிழ் இனத்தின் தலைவராகவும், பல இந்திய பிரதமர்களையும், குடியரசுத் தலைவர்களையும் முன்மொழிந்து, இந்திய துணைகண்டத்தின் அரசியல் போக்கையும் இயக்கும் வித்தகராகவும் விளங்கி யவர்.

பொது வாழ்க்கையில் 95வது வயது வரை ஓய்வின்றி உழைத்து நவீன தமிழகத்தை உருவாக்கி தலைசிறந்த நிர்வாகியாக திகழ்ந்தவர்.

60 ஆண்டுகளுக்கு மேலாக அரசியல், கலை, இலக்கியம், திரைத் துறை, பத்திரிக்கையாளர், இதழியல் துறை இப்படி பலதுறைகளில் மிளிர்ந்து பிரமிப்பூட்டும் வகையில் தமிழ்நாட்டிற்கும், இந்திய துணைக் கண்டத்திற்கும் தனது பங்களிப்பை அளித்தவர்.

ஏழை, எளியவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மகளிர், நெசவாளர்கள், வணிகர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், மாணவிகள், இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், சிறுபான்மையினர் என அனைத்து தரப்பினரின் நல்வாழ்வுக்காக ”கண் துஞ்சாமல் தொடர்ந்து உழைத்த தூய தலைவர் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

”ஏற்றுக் கொண்ட இலட்சியத்தை வெற்றி பெறச் செய்யும் பணியில் எனது பயணம் தொடரும், இடையூறு எதுவரினும் நில்லேன், இறுதி மூச்சுள்ள வரை உழைப்பேன் என முழங்கிச் செயலாற்றியவர். வெற்றிக்கும், தோல்விக்கும் நாமே பொறுப்பு என்கிற மன உறுதியுடன்; ஒரு பணியில் இறங்குகிற எந்த மனிதனையும் அயர்வோ, சோர்வோ அணுகாது அந்த மனிதனின் வாழ்வில் பின்னடை வும் ஏற்படாது என எத்தனையோ துன்பங்களையும், தொல்லைகளையும் தாங்கிக் கொண்டு, அடுக்கடுக்காக வந்த சோதனைகளையும், வேதனைகளையும் எதிர்கொண்டு, அவற்றையெல்லாம் தகர்த்தெரிந்து நின்று, தடம்புரளாமல் தமிழினத்திற்கு தொண்டு செய்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளில் 03.06.2026 புதன்கிழமை அன்று காலை 09.00 மணி அளவில் சேலம் மத்திய மாவட்டக் கழகத்தின் சார்பில் 4ரோடு அண்ணா பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து கொண்டாடப்படவுள்ளது.

தமிழ்! தமிழ்!!, தமிழ் இனம்! என வாழ்ந்து நம் உணர்வாய் – என்றைக்கும் நம்மை இயக்கும் முத்தமிழறிஞரின் திருவுருவ படத்தினை சேலம் மத்திய மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரின் வீடுகளிலும் வைத்து வணங்குவதோடு, அனைத்துப் பகுதிகளிலும் பொதுமக்கள் கூடும் இடங்களிலும், ஒவ்வொரு பாகத்திற்கும் ஒரு இடத்தில் வைத்து வணங்கி இனிப்புகள் வழங்கியும், மருத்துவ முகாம்கள், மரக்கன்றுகள் நடுதல், மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குதல் மற்றும் நலத்திட்ட உதவிகள் என அனைத்து நிகழ்ச்சிகளையும் எழுச்சியோடு ஏற்பாடு செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்வதோடு, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், ஊராட்சி கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, வழக்கறிஞர் அணி, மாணவர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, தகவல் தொழில்நுட்ப அணி, வர்த்தக அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் அணி, நெசவாளர் அணி, அயலக அணி, தொண்டர் அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்புசார ஓட்டுனர் அணி, விளையாட்டு மேம்பட்டு அணி, தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மீனவர் அணி ஆகிய அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் என அனைத்து நிர்வாகிகளையும், கழகத் தோழர்களையும் இந்த நிகழ்ச்சி களை எழுச்சியோடு, உணர்வுபூர்வமாக சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் முழுவதும்

முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாள் விழா!

மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் அறிக்கை!

குமரி,ஜூன்.1- கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வருகிற 2026, ஜூன் 3ம் தேதி, புதன்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் எனது தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழுவுருவ வெண்கல சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

மேலும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம் மற்றும் அனைத்து கிளை கழகங்களிலும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கிட வேண்டும் எனவும், மேலும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கழகங்கள், ஊராட்சி கிளை கழகங்கள் மற்றும் கழக சார்பு அணிகளின் சார்பாகவும் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள், இலவச மருத்துவ முகாம்கள், இரத்ததான முகாம்கள், ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளி தங்கும் இல்லங்களில் அறுசுவை உணவு வழங்குதல், பள்ளி குழந்தைகளுக்கு நோட்டு புத்தகங்கள், எழுது பொருட்கள் வழங்கியும், மேலும் தலைவர் கலைஞர் அவர்களின் சிறப்புகளை விளக்கும் வகையில் தெருமுனைக் கூட்டம், பொதுக் கூட்டம், பட்டிமன்றம், கலை நிகழ்ச்சி, கட்டுரை போட்டி, பேச்சு போட்டிகள் என சீரும் சிறப்போடும் எழுச்சியோடும் நடத்தி தலைவர் கலைஞர் அவர்களின் நினைவை கூறும் வகையில் கொண்டாட வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே மாவட்டம் முழுவதும் நடைபெறவுள்ள இந்நிகழ்ச்சிகளில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

விளாத்திகுளம் அரசு மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் VKM11 கிரிக்கெட் கிளப் சார்பாக மாபெரும் கிரிக்கெட் இறுதிப் போட்டியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,தலைமை செயற்குழு உறுப்பினர் ஜீ. வி. மார்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் விளாத்திகுளம் ஒன்றிய செயலாளர்கள் இம்மானுவேல், ராதாகிருஷ்ணன், விளாத்திகுளம் பேரூர் கழகச் செயலாளர் வேலுச்சாமி, விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி மருத்துவர் அணி அமைப்பாளர் ஸ்ரீராம், இளைஞர் அணி ஆதித்யன், விக்னேஷ் உள்ளிட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர்.